# வேளாண் கல்லூரி வளாக நேர்காணலில் தேர்வான மாணவர்களுக்கு பணி உறுதி கடிதம்

## தஞ்சை ஆட்சியர் வழங்கினார்



உசிலம்பட்டி ஆர்விஎஸ் வேளாண்மைக் கல்லூரியில் 7.5 சதவீத இடஒதுக்கீட்டில் பயின்று வளாக நேர்காணலில் தேர்வான மாணவ, மாணவிகளுக்கு பணி உறுதி கடிதத்தை திங்கள்கிழமை வழங்கிய ஆட்சியர் பா. பிரியங்கா பங்கஜம்.

**தஞ்சாவூர், ஜூலை 28 :** தஞ்சாவூர் அருகேயுள்ள ஆர்.வி.எஸ். வேளாண் கல்லூரியில் அரசின் 7.5 சதவீத இடஒதுக்கீட்டில் படித்து, வளாக நேர்காணலில் தேர்வான மாணவர்களுக்கான பணி உறுதி கடிதத்தை ஆட்சியர் பா. பிரியங்கா பங்கஜம் திங்கள்கிழமை வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்டம், செங்கிப்பட்டியை அடுத்த உசிலம்பட்டியில் ஆர்.வி.எஸ். வேளாண்மைக் கல்லூரி உள்ளது. 2024-25-ஆம் கல்வி ஆண்டில் 134 மாணவ மாணவியர் இறுதி ஆண்டு படித்து வருகின்றனர். கடந்த ஜூலை 22-இல் அங்கு மதுரையைச் சேர்ந்த தனியார் நிறுவனம் நடத்திய வளாக நேர்காணலில் 100 மாணவர்கள் பங்கேற்றனர். இதில் 51 மாணவர்கள் ஆண்டுக்கு ரூ. 3 லட்சம் வருமானத்துடன் கூடிய வேலை வாய்ப்பு பெற்றனர். இவர்களில் 6 மாணவர்கள் அரசு பள்ளியில் படித்து, தமிழக அரசின் 7.5% இட ஒதுக்கீட்டில் சேர்ந்து பயின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தனியார் நிறுவனத்தில் வேலை வாய்ப்பு பெ றும் சந்திரசேகர், தனுஸ்ரீ, லோஷனா, நடராஜன், நவப்பிரியா, ரேணுகாதேவி ஆகியோருக்குமாவட்ட ஆட்சியர் பிரியங்கா பங்கஜம் பணி உறுதி கடிதங்களை ஆட்சியரகத்தில் திங்கள்கிழமை வழங்கினார்.

கல்லூரியின் இயக்குநர் பெ. பாண்டியராஜன், முதல்வர் செ.வெ. கிருஷ்ணமூர்த்தி, உதவி பேராசிரியர்கள் கு. ராமலிங்கம், ச.லோகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.